
Reformed Series.

# Papa Tamil Readers 2

## பாபா தமிழ் வாசகம்



T12833
R003L05
T. 12833

Sri Shanmuka Publishing House, Mannargudi, Tanjore.

REFORMED SERIES

PAPA

# TAMIL READERS

## SECOND BOOK

சீர்திருத்திய முறை

பாபா

# தமிழ் வாசகம்

## இரண்டாம் புத்தகம்

## 2

BY

S. YAGNASWAMI

SRI SHANMUKA PUBLISHING HOUSE

MANNARGUDI :: TANJORE. DT.

Dedicated to the Children
of the Tamil Nadu.

Rights Reserved-1934. Price 3 As.



# முகவுரை

(Reformed Series) சீர்திருத்திய பாபா தமிழ் வாசகம் எனப் பெயரிய இத்தொகுதியில் ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு ஏற்ற தமிழ் வாசகப் புத்தகங்களைப் புதிய முறையில் தொகுத்தனம். இவற்றில் மாணவர்களுக்குத் தமிழ் அறிவைச் செவ்வனே புகட்டுவதோடு, அதன்கண் பெரும் பற்றுதலையும், மிகுதிப்படுத்தலாம் என்பது எங்களது துணிபு.

நமது நாட்டுச் சிறுவர்கள் ஆரம்பப் பள்ளிக்கூடத்தை விட்டகன்ற பின்னரும், தமிழ்நூல்களைப் பயில்வதிலும் அதை ஆராய்ச்சி செய்வதிலும், ஆர்வமடைந்து அவற்றில் இடைவிடா ஊக்கம் கொள்ளவேண்டுமென்பதும் எங்களது கருத்து.

ஆரம்ப பாடசாலைகளில் விசேஷமான தேக்கம், மாணவர்கள் பள்ளிக்கூடத்தை விட்டகன்ற பின்னர், முற்றிலும் தமிழ் அறிவே இல்லாமல், படிப்பு வாஸனையை மறந்து நஷ்டமடைந்து வருதல் இவற்றை நிவர்த்தி செய்வதும் நோக்கங்களில் ஒன்றாகும். இப்புத்தகங்கள் மூலமாய்ச் சிறுவர்களுக்கு முன்னோர் வாழ்க்கை தெய்வபக்தி, தேசபக்தி, ஜீவகாருண்யம் முதலிய நற்குணங்களைப் புகட்டுவதும் நோக்கங்களில் மற்றொன்றாகும்.

இத்தகைய நோக்கங்களில் சிறுபான்மையாகிலும் கைகூடுமாயின் அஃதொன்றே எங்களுக்குப் போதிய கைம்மாறாகும்.

நுண்பொருட் பாடமாகிய இவ்வாசகங்களில் கட்டுரைக் கதைகள் குறைவுபட்டிருப்பது இதன் கண்யத்தைப் பொன் போற் சிறப்பிக்கும். குழந்தைகளின் மனோ தத்வ சாஸ்திரத்தையும், பால சிட்சண முறையையும் முற்றிலும் தழுவி இப் புத்தகங்கள் தயாரித்திருப்பதினால், கல்வி அதிகாரிகளும், கல்விச்சாலைத் தலைவர்களும், ஆசிரியர்களும் நமது நாட்டுக் கல்வி முன்னேற்றத்தில் ஈடுபட்ட ஏனையோர்களும், இப்புத்தகங்களை ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.


இத் தொகுதியில் முன்னமே வெளிவந்துள்ள பாபா பாலசிட்சை 1, 2 பாகங்களை ஆதரித்து, தொடர் முறையில் இவ்வாசகங்களைத் தொகுக்கும்படி தூண்டிய தமிழ் நாட்டு மக்கள் யாவருக்கும் எங்கள் நன்றியைச் செலுத்துகிறோம்.

குணநாடிக் குற்றமு நாடி யவற்றின்
மிகைநாடி மிக்க கொளல்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | விநாயகர் ... ... | 7 |
| 2. | செடி ... ... | 9 |
| 3. | ஔவையார் ... .... | 10 |
| 4. | பாபா பெரியவன் ஆனான் ... ... | 11 |
| 5. | காகம் ... ... | 12 |
| 6. | ஆணை ஆட்டம் ... ... | 13 |
| 7. | அணில் ... .... | 14 |
| 8. | நந்தனார் ... ... | 15 |
| 9. | ஆலமரம் .... ... | 16 |
| 10. | கடவுளின் சிருஷ்டி ... ... | 17 |
| 11. | பாபா பாட்டு ... ... | 18 |
| 12. | இளவரசர் ... ... | 20 |
| 13. | வாய்பாடு ... ... | 21 |
| 14. | திசைகள் ... ... | 23 |
| 15. | தேக சுத்தம் ... ... | 25 |
| 16. | குடியானவன் ... ... | 26 |
| 17. | எங்கள் நெல் ... ... | 27 |
| 18. | என்னால் முடியாது உன்னால் முடியும் ... | 28 |
| 19. | இராமர் ... ... | 30 |
| 20. | எங்கள் நாடு ... ... | 33 |
| 21. | உனது நண்பர் ... ... | 34 |
| 22. | கண்ணன் ... ... | 35 |

| | | |
|---|---|---|
| 23. | ஐவர் ... ... | 36 |
| 24. | கைவீசு ... ... | 38 |
| 25. | கடவுள் ... ... | 39 |
| 26. | ரூபாய் ... ... | 40 |
| 27. | பழங்கள் ... ... | 42 |
| 28. | சொக்காய் ... ... | 43 |
| 29. | காலைப்பாட்டு ... ... | 44 |
| 30. | இவர் யார் ... ... | 45 |
| 31. | எல்லாம் அவன் செயல் ... ... | 46 |
| 32. | நமது உடை .... ... | 47 |
| 33. | மயில் .... ... | 49 |
| 34. | இராஜ வாழ்த்து ... ... | 50 |
| 35. | வாழ்த்துப் பாட்டு .... ... | ,, |
| 36. | ஆத்தி சூடி ... ... | 51 |
| 37. | உலகநீதி ... ... | 53 |



உ

## 1. விநாயகர்

(1)

1. வித்தை கற்கும் பாலர் நாமும்
ஸித்திக் கடவுளைச் சிந்திப்போம்

2. பள்ளிக்கூடம் பாடம் படிக்க
பிள்ளையாரைப் பேணுவோம்

3. எந்த வேலை இயற்றினாலும்
தந்த பாணியைத் தொழுவோம்

4. இந்து தேவாலய மெங்கும்
முந்தி யானை முகனைக் காண்

5. பிள்ளையார் சுழி(உ) எழுத நாம்
பிள்ளை முதலே பழகுவோம்


6. கணபதியைக் கை தொழுதால்
குணம் பெறுவார் எந்நாளும்

(2)

1. சிந்தித் தவர்க்கருள் கணபதி ஜயஜய
2. சீரிய ஆனைக் கன்றே ஜயஜய
3. அன்புடை அமரரைக் காப்பாய் ஜயஜய
4. ஆவித் துணையே கணபதி ஜயஜய
5. இண்டைச் சடைமுடி இறைவா ஜயஜய
6. ஈசன் தந்தருள் மகனே ஜயஜய
7. உன்னிய கருமம் முடிப்பாய் ஜயஜய
8. ஊர் நவசக்தி உகந்தாய் ஜயஜய
9. எம்பெருமானே இறைவா ஜயஜய
10. ஏழுலகம் தொழ நின்றாய் ஜயஜய
11. ஐயா கணபதி நம்பியே ஜயஜய
12. ஒற்றை மருப்புடை நம்பியே ஜயஜய
13. ஓங்கிய ஆனைக் கன்றே ஜயஜய
14. ஔவியம் இல்லா அருளே ஜயஜய
15. அக்கர வஸ்து வானவா ஜயஜய.


## 2. செடி


1. படத்தில் இருப்பது ஒரு செடி. அதில் கிளைகளும் இலைகளும் உண்டு. இலைகள் பசுமை நிறம். அவைகள் கண்களுக்குக் குளிர்ச்சியாய் இருக்கும்.



செடியின் அடிபாகம் வேர். வேர் செடியைத் தாங்கும். செடியின் நடுவில் இருப்பது தண்டு. தண்டு கிளைகளைத் தாங்குகிறது. கிளைகளில் இலைகள் இருக்கின்றன. முற்றின இலை பழுப்பு நிறம். பழுத்த இலை கீழே விழும்.

3. செடி புஷ்பம் கொடுக்கும். புஷ்பம் வாசனை வீசும். புஷ்பம் கடவுளுக்கு அர்ச்சனை செய்ய உதவும். எல்லா சுபகாரியங்களுக்கும் புஷ்பம் உதவும். புஷ்பத்தில் பிஞ்சு உண்டாகும். பிஞ்சு முற்றிக்





காய் ஆகும். காய் முற்றிப் பழம் பழுக்கும். பழத்தில் விதை உண்டு. விதைமுளைத்துச் செடியாகும். பெரிய செடிக்குமரம் என்று பெயர். மரம் நிழலைத்தரும். பலமரங்கள் அடர்ந்துள்ள இடம் தோப்பு.

## 3. ஔவையார்

1. வெகு காலத்திற்கு முன் ஔவையார் என்ற ஓர் அம்மை இருந்தார். அவர் கல்வியில் தேர்ந்தவர். அவர் ஏழைகளிடத்தில் அன்புள்ளவர். குழந்தைகளிடத்திலும் பிரியமுள்ளவர். அவர் மிக்க ஏழை. யாராவது கொஞ்சம் கூழ் வார்த்தால் அதற்கு பாட்டுப் பாடுவார். அவரைக் "கூழுக்குப் பாடுகிறவர்" என்று சொல்லுவார்கள்.



2. ஔவையார் பல நீதிகளைப் பாடி இருக்கிறார். அவைகள் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலியவை.

1. ஔவை என்றோர் ஸ்திரீயின் பெயராம்.
2. ஔவையின் பெற்றோர் ஆதி பகவனும்.
3. ஔவை வாணியின் பிறப்பே என்பார்.
4. ஔவை வாக்கே அருள்வாக் கென்பார்.
5. ஔவை சொல்லிய பழமொழி நீதி.
6. ஔவை நீதி கவிகள் செய்தார்.
7. ஔவை வாக்கே சொல்லின் திறமாம்.
8. ஔவை பாடியது ஆத்திசூடி.
9. ஔவை தமிழ் வேத கவி என்பார்.
10. ஔவை காலம் ஆதி சங்கமாம்.



## 4. பாபா பெரியவன் ஆனன்

கதை கதையாம் காரணமாம்
காரணத்தில் ஓர் குளமாம்
ஓர் குளத்தில் புல் முளைத்ததாம்.
புல்லை பசுவுக்கு போட்டான்
பசு பால் கொடுத்தது
பாலைப் பாட்டியிடம் கொடுத்தான்
பாட்டி பக்ஷணம் கொடுத்தாள்
பக்ஷணத்தை காக்கைக்கு கொடுததான்
காக்கை கரிதந்தது
கரியைக் கன்னனிடம் தந்தான்
கன்னன் சொம்பு தந்தான்
சொம்பைக் கிணற்றில் போடடான்
கிணறு தண்ணீர் தந்தது
தண்ணீரை பூச்செடிக்கு விட்டான்
பூச்செடி பூக் கொடுத்தது

பூவை சுவாமியிடம் கொடுத்தான்
சுவாமி புத்தி கொடுத்தார்
புத்தியால் பாபா பெரியவன் ஆனான்.

## 5. காகம்

1. பறக்கும் பிராணிகளுக்கு பக்ஷி அல்லது பறவை என்று பெயர். சிறுவர்களே! உங்களுக்கு நன்றாய்த் தெரிந்தபறவைகளில் காகம் ஒன்று. அதன் நிறம் கறுப்பு. காகம் அதிகாலையில் எழுந்து "கா, கா," என்று கத்தும். அதைக் கரைகிறது என்பார்கள். காகம் நமது வீட்டு முற்றத்திலும், வீதியிலும் உள்ள பதார்த்தங்களைப் பொறுக்கித் தின்னும்.



2. நாம் சாப்பிடுமுன், காக்கைக்குச் சோறு போடுவது வழக்கம். அது தனது இனத்தைச் சேர்த்துக் கொண்டு சாப்பிடும். இது நல்ல பழக்கமல்லவா! அது காலையில் எழுந்தது முதல் சுறுசுறுப்பாய் இருக்கும். மாலையில் குளிக்கும். அதற்கு தைரியம் அதிகம் உண்டு. தந்திரமும் உண்டு. காக்கை வெகு காலம் ஜீவித்திருக்கும். காகம் மனிதருக்கு உபயோகமுள்ள பக்ஷி. காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு.


1. "கா, கா," என்றால் காகம் வருமே.
2. வீட்டைச் சுற்றிக் காகம் வருமே.
3. தேகம் குளிக்கும் காகம் தினமே.
4. காகமும் குயிலும் கருமை நிறமே.
5. சொந்த வரவைச் சொல்லும் காகம்.
6. தெருக்களை சுத்தம் செய்யும் காகம்.
7. காகம் வலம் பறக்க சகுனம் என்பார்.
8. காகம் என்றும் கடைக்கண் பார்க்கும்.
9. காகம் என்றும் (தன்) இனத்தைக் கூட்டும்.
10. காகம் சிறுவரை ஏய்க்கப் பார்க்கும்.

---

## 6. ஆனை ஆட்டம்.



ஆனை ஆனை அழகர் ஆனை
அழகரும் சொக்கரும் ஏறுமானை
ஆனை ஆனை அரசர் ஆனை
அரசனும் அரசியும் ஏறுமானை
ஆசாரவாசலைகாக்கும் ஆனை
கட்டுக்கரும்பை முறிக்கும் ஆனை
சிங்காரத் தோட்டத்தை
அழிக்கிம் ஆனை
காவேறி ஜலத்தை கலக்கும் ஆனை
கடைவீதி எல்லாம் சுற்றும் ஆனை
கண்டவறை எல்லாம் களிப்பூட்டும் ஆனை
குட்டியானைக்கு கொம்பு முளைத்தது
பட்டணமெல்லாம் சுற்றிவந்தது
பட்டத்து ஆனைக்கு அம்பாரிவைத்தது
பார்க்க வாருங்கள் பாப்பாக்களே.




## 7. அணில்

நான் ஒரு அணில். நான் ஸதா கஷ்டப்பட்டு வேலே செய்வேன். மழை காலத்திற்கு வேண்டிய ஆகாரத்தைத் தேடுகிறேன். பழங்களும் கொட்டைகளும் எனக்கு ஆகாரம். எனது பற்கள் வெகு கூர்மை. அவற்றினல் எவ்வித கடினமான பதார்த்தங்களையும் உடைப்பேன். எனது வால் நீண்டு அழகாயிருக்கும். நான் வெகு வேகமாய் ஒரு மரத்திலிருந்து மற்ருெரு மரத்திற்குத் தாண்டுவேன். எனது வால் எனக்கு வெகு உபயோகம். எனது நகம் வெகு கூர்மை. அவற்ருல் மரத்தைப்பற்றி ஏறுவேன். அதைச் சுற்றிச் சுற்றி ஓடுவேன். எனக்கு வேண்டியவற்றை எல்லாம் கடவுள் கொடுத்திருக்கிருர்.

சின்னஞ் சிறு அணிலே
சிங்காரச் சிற்றணிலே
உன்னைப் போல நானுமே
உழைத்திடவும் வேணுமே.


## 8. நந்தனார்





ஆதனூர் என்பது ஒரு சிறிய கிராமம். அதில் நந்தனார் பிறந்தார். அவருக்குச் சிறு வயதிலேயே தெய்வ பக்தி உண்டு. நந்தனாருக்கு சிநேகிதர்கள் பலர். எல்லோரும் சேர்ந்து பஜனை செய்வார்கள். மார்கழி மாதம் திருவாதிரை உத்ஸவம் நடக்கிறதுண்டு. அத்திருநாள் சிதம்பரத்தில் நன்றாயிருக்கும். அதற்கு நந்தனார் அங்கே போனார். சிநேகிதர்களும் கூடவே சென்றார்கள். அங்கே அவர் கடவுளைக் கும்பிட்டார். கடவுள் அவருக்கு தரிசனம் கொடுத்தார். ஜனங்கள் நந்தனாரைக் கொண்டாடுகிறார்கள்.

நந்தனார் ஓர் சிறந்த பக்தர்



## 9. ஆலமரம்

1. மரங்கள் எல்லாவற்றிலும் மிகப் பெரியது ஆலமரம். நமது நாட்டு ரஸ்தாக்களில் இம்மரத்தைப் பார்க்கலாம். அதன் கிளைகள் சுற்றிலும் பரவி இருக்கும். ஒவ்வொரு கிளையிலிருந்து கயிற்றைப்போல் விழுதுகள் தொங்குகின்றன. அவைகள் பூமியில் இறங்கி தூண்கள்போல் கிளைகளைத் தாங்குகின்றன.

2. ஆலமரம் அதிக நிழலைக் கொடுக்கும். அதன் நிழல் மிகக் குளிர்ச்சியாய் இருக்கும். அதன் அடியில் பலபேர் தங்கியிருக்கலாம். வழி நடக்கும் பிராணிகளின் களைப்பைத் தீர்க்க இது நல்லவசதி. ஜனங்கள் ஆலிலையைத் தைத்து போஜன பாத்திரமாக உபயோகிக்கிருர்கள்.

3. ஆலம்பழம் மிகச் சிறியது. அது சிவப்பாய் இருக்கும். அது பக்ஷிகளுக்கு நல்ல உணவு. ஆல மரம் பழுத்தால் பக்ஷிகள் தாஞகவே வந்து கூடும்.

ஆலம்விழுது பல்லுக்குறுதி

## 10. கடவுளின் சிருஷ்டி

ஒரு பிரயாணி வெகுதூரம் நடந்து களைப் படைந்தான். வழியில் ஓர் ஆலமரத்தடியில் உட் கார்ந்தான். அண்ணாந்து பார்த்தான். ஆலம்பழம் பழுத்திருந்தது.


“இப் பெரிய மரத்திற்கு இச்சிறிய பழம் இருக்கிறதே” என்று வியப்படைந்தான்.

அம்மரத்தடியிலேயே படுத்துச் சற்று நேரம் தூங்கினான். காற்று அடித்தது. ஓர் பழம் அவன் தலையில் விழுந்தது. கண்விழித்துக் கொண்டான். “இப்பழம் சிறியதாய் இருந்ததால் என் தலை தப்பி யது” என்று சொன்னான். கடவுளின் சிருஷ்டியை மெச்சினான்.


## 11 பாபா பாட்டு




ஓடி விளையாடு பாப்பா— நீ
ஒய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா



சின்னஞ் சிறு குருவி போ
[லே—நீ
திரிந்து பறந்து வா பாப்பா
வன்னப் பறவைகளை கண்டு-
[நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு
[பாப்பா.



கொத்தித் திரியும் அந்தக் கோழி-
[அதைக்
கூட்டி விளையாடு பாப்பா.
எத்தித் திரியுமந்தக் காக்காய்-அதற்
கிரக்கப்பட வேணும் பாப்பா.




பாலைப் பொழிந்து தரும் பாப்பா—
[அந்தப்
பசு மிக நல்லதடி பாப்பா

வாலைக் குழைத்துவரும் நாய் தான்-
[அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா.




வண்டி இழுக்கும் நல்ல குதிரை—
[நெல்லு
வயலில் உழுது வரும் மாடு.



அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு-
[இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா



சு. பா.



## 12. இளவரசர்

படத்தில் இருப்பவர் எட்வர்ட் இளவரசர். இவரை வேல்ஸ் இளவரசர் என்பார்கள். இவர் நமது இராஜாவின் மூத்த பிள்ளை. இவர் வெகு சமர்த்தர். இவர் குழந்தையிலேயே எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டார். இவருக்கு விளையாட்டிலேயும் அதிகப் பழக்கம் உண்டு. இவர் ஏழைகளிடத்தில் அதிக அன்புள்ளவர்.

இளவரசர் பல தேசங்களுக்கும் போயிருக்கிறார். இவர் நமது சென்னைக்கு 1922-ம் வருஷம் ஜனவரி மாதம் 13-ம் தேதி விஜயம் செய்தார். இவரே நமது ஜார்ஜ் இராஜாவிற்குப் பிறகு நமக்கு இராஜா ஆவார். நாம் இராஜாவிடத்தில் விசுவாசமாய் இருக்கவேண்டும். அது நமது முக்கிய கடமை.

அரசனைப் போற்றி வாழ்.

## 13. வாய்பாடு

(1)

ஒன்றுடனே ஒன்று சேர்க்க
ஒருங்கே இரண்டாகும். $1+1=2$

இரண்டுடனே ஒன்று சேர்க்க
இணையில் மூன்ருகும். $2+1=3$

மூன்றுடனே ஒன்று சேர்க்க
முறையாய் நான்காகும். $3+1=4$

நான்குடனே ஒன்று சேர்க்க
நலமாய் ஐந்தாகும். $4+1=5$

ஐந்துடனே ஒன்று சேர்க்க
அழகாய் ஆருகும். $5+1=6$

ஆறுடனே ஒன்று சேர்க்க
அடுக்காய் ஏழாகும். $6+1=7$

ஏழுடனே ஒன்று சேர்க்க
எண்ணம் எட்டாகும் $7+1=8$

எட்டுடனே ஒன்று சேர்க்க
இனிமை ஒன்பதாகும் $8+1=9$

ஒன்பதுடனே ஒன்று சேர்க்க
பண்பாய் பத்தாகும். $9+1=10$

என்பதறிந் தென்றுங் கூட்ட
எண்ணின் கணிதமாம்.

(2)

பத்திலிருந்து ஒன்று நீக்க
பரிவாய் ஒன்பதே. 10 - 1 = 9

ஒன்பதிலிருந்து ஒன்று நீக்க
உரிமை எட்டாகும். 9 - 1 = 8

எட்டிலிருந்து ஒன்று நீக்க
எதிரில் ஏழாகும். 8 - 1 = 7

ஏழிலிருந்து ஒன்று நீக்க
இணையில் ஆறாகும். 7 - 1 = 6

ஆறிலிருந்து ஒன்று நீக்க
அன்பாய் ஐந்தாகும். 6 - 1 = 5

ஐந்திலிருந்து ஒன்று நீக்க
அறிவாய் நான்காகும். 5 - 1 = 4

நான்கிலிருந்து ஒன்று நீக்க
நலமாய் மூன்றாகும். 4 - 1 = 3

மூன்றிலிருந்து ஒன்று நீக்க
முன்னே இரண்டாகும். 3 - 1 = 2

இரண்டிலிருந்து ஒன்று நீக்க
இனிமை ஒன்றாகும். 2 - 1 = 1

ஒன்றிலிருந்து ஒன்று நீக்க
ஒன்றுமில்லை காண். 1 - 1 = 0

(3)

ஒன்றும் ஒன்றும் இரண்டு. $1+1=2$

உண்மை நன்மை உண்டு.

இரண்டும் இரண்டும் நான்கு. $2+2=4$

இரந்தும் ஈகை பாங்கு.

மூன்றும் மூன்றும் ஆறு. $3+3=6$

முன்னோர் சொல்லை கூறு.

நான்கும் நான்கும் எட்டு. $4+4=8$

நாட்டில் கலகம் மட்டு.

ஐந்தும் ஐந்தும் பத்து. $5+5=10$

அணியில் அழகு முத்து.




14. திசைகள்

சூரியன் காலையில் உதிக்கிறது. மாலையில் அஸ்தமிக்கிறது. நீ சூரியன் உதிக்கிற திசையைப் பார்!

அத்திசைக்கு கிழக்கு என்று பெயர். அது உனது முன் பக்கம். அது மறைகிறதிசை மேற்கு: அது உனது பின் பக்கம். உனது தலைப் பக்கம் அல்லது இடது கைப்பக்கம் வடக்கு. கால் பக்கம் அல்லது வலது கைப்பக்கம் தெற்கு. இவைகள் நான்கும் திசைகள்.

இவைகளுக்கு மத்தியில் நாலுதிசைகள் உண்டு. தெற்குக்கும் கிழக்குக்கும் மத்தியில் உள்ளது தென்கிழக்கு. அம்மாதிரியே தென் மேற்கு, வடகிழக்கு, வடமேற்கு என்று நாலு திசைகளும் உண்டு. ஆக எட்டு திசைகள். அவைகளை நம் முன்னோர் இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசான்யம் என்பார்கள்.

1. கிழக்கு — இந்திரன்
2. தென்கிழக்கு — அக்கினி
3. தெற்கு — இயமன்
4. தென்மேற்கு — நிருதி
5. மேற்கு — வருணன்
6. வடகிழக்கு — வாயு
7. வடக்கு — குபேரன்
8. வடமேற்கு — ஈசான்யம்

## 15. தேக சுத்தம்

1. பாலர் முதலாய் விருத்தரும் நீர்
காலம் விடியுமுன் கண் விழிப்பீர்
கரங்கள் தேய்த்துக் கை குவிப்பீர்
கடவுளைத் தொழுது பின் எழுந்திருப்பீர்


2. மலங்கள் ஜலங்கள் புறங்கழிப்பீர்
மலஜலங்கள் அடைக்கில்
வரும் ஜுரமாம்
துலங்கப் பற்கள் தூரிகொள்வீர்
துலங்குங் குச்சிகள் ஆலும்
வேலும்.




3. கால் உடல் கைமுகம்
விளக்கிடுவீர்
காலையில் ஸ்நானம் செய்திடுவீர்
வெளிச் சென்று வரும்போதெல்லாம்
கால்கை முகத்தை விளக் கிடலாம்.

4. வேர்வை நீரை விலக்கிடுவீர்
நீரில் உடலைத் தேய்த்திடுவீர்
தைல ஸ்நானம் செய்திடுவீர்
ஸ்நானம் செய்தபின் தலை துடைப்பீர்.


சுத்தம் சோறு போடும் K. மா.



## 16. குடியானவன்

1. படத்தில் இருப்பவன் ஓர் குடியானவன். உழுது பயிர் செய்பவனுக்கு குடியானவன் என்று பெயர்.

2. அவன் இப்பொழுது வயலை உழுகிறான். உழுவதற்கு இரண்டு மாடுகள் அவசியம் வேண்டும். கலப்பை மண் வெட்டியும் குடியானவனுக்கு வேண்டிய கருவிகள். மழை பெய்த உடன், அவன் வயலை உழுவான். பிறகு விதை விதைப்பான். தண்ணீர் பாய்ச்சுவான். தினந்தோறும் வயலைப் போய்க் கவனித்துப் பார்ப்பான். களை எடுப்பான். அறுவடை காலத்தில்



தானியங்களைச் சேகரிப்பான். நமக்குவேண்டிய உணவுப் பொருள்களை எல்லாம் குடியானவனே பயிர் இடுகிறான். தனக்கு வேண்டியவற்றை வைத்துக்கொண்டு மிகுதியானதை விற்றுவிடுவான்.

பருவத்தே பயிர் செய். உழைப்பாளியே சிறப்பாளி.


---

## 17. எங்கள் நெல்

வாய்க்கால் வெட்டி வயலுழுது
வரப்புக் கட்டி உரம் இட்டு
பரம் படித்து பண் படுத்தி
விதை விதைத்து நீர் பாய்ச்சி
காவல் காத்து களை பிடுங்கி
நீர் ஏற நிலம் உயர
வரப்பு உயர வளம் ஓங்க
கதிர் சொறிய தாள் சாய
அரிவாளும் தான் அரிய
போர் அடித்து தாளடித்து
பொதி கட்டி கோட்டைகட்டி
வீட்டினிலே இட்டநெல்
யார்நெல்? எங்கள் நெல்.



## 18. என்னால் முடியாது உன்னால் முடியும்



நீ யார்? எங்கே போகிறாய்! நீ இவ்வளவு மெதுவாய்ப்போகிறாயே! எப்பொழுது போக வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேர்வாய்? நத்தையைப்போல் நகருகிறாயே!

2. ஹா! என் பெயர் உனக்கு எப்படித் தெரிந்தது?

எங்கள் உபாத்தியாயர் மெதுவாய் நடக்கிற பையன்களை "நத்தையைப் போல் ஊருகிறாய்?" என்பார்.

சரி அப்படியா! என் பெயர் அதுதான்.

நீ ஏன் மெதுவாய் போகிறாய்? உன் முதுகில் என்ன சுமந்து செல்லுகிறாய்?

அதுதான் என் வீடு. அதை நான் சுமந்து செல்லுகிறேன். அதனால்தான் நான் மெதுவாய் போகிறேன்.

நீ ஏன் வீட்டைச் சுமந்து செல்லுகிறாய்? எங்களைப்போல் அதை இருந்த இடத்தில் வைத்து விட்டு வரக் கூடாதா?

அது என்னால் முடியாது. என் வீடு எப்பொழுதும் என்னோடு கூடவேதானிருக்க வேண்டும்.


இல்லாவிட்டால் என் தேகம் காயமடைந்து விடும். எனக்கு ஏதாவது அபாயம் நேர்ந்தால் உடனே வீட்டிற்குள் புகுந்து கொள்வேன். அது உன்னால் முடியாது. நீ வீட்டிற்குப் போக ஓடவேண்டும்.

உன்னால் ஓட முடியாதா ?

அது என்னால் முடியாது. எனக்கு ஒரு கால் தான் இருக்கிறது. உன்னைப் போல் வீட்டிற்கு ஓட எனக்கு அவசியம் இல்லை. என் வீடு என்னோடு கூடவே இருக்கிறது.

நீ எப்படி வீட்டைச் சுமந்து செல்லுகிறாய்! அதை எனக்கு நினைக்கவே முடியவில்லை!

அது எனக்குப் பழக்கமாய் விட்டது. நீ ஒரு மூட்டையைத் தலையில் தூக்கிக்கொண்டு போவதாய் நினைத்துக் கொள். நீ அப்பொழுது வேகமாய் ஓட முடியுமா ?



அது என்னால் முடியாது. நான் வேகமாய் ஓடாவிட்டாலும், விடாமல் செல்லுவேன். நான் ஆரம்பித்த வேலையை இடையில் நிறுத்த மாட்டேன். உன்னால் முடியுமா? என்னால் முடியும்.


முயற்சி யுடையார் இகழ்ச்சி அடையார்.

## 19. இராமர்—I


1. இந்தியா நமது தேசம். அதன் வடக்கே அயோத்தி என்று ஓர் பெரிய பட்டணம் இருக்கிறது. அதை முன் காலத்தில் தசரதச் சக்கரவர்த்தி ஆண்டார். அவருக்கு மூன்று மனைவிமார்களும் நான்கு குமாரர்களும் இருந்தார்கள். இவர்களுடைய பெயர் இராமர், இலக்ஷ்மணர், பரதர், சத்ருக்னர். இவர்கள் நால்வரும் சகோதரர்கள்.

2. மிதிலை என்பது மற்றொரு நகரம். அதன் அரசர் ஜனகர். அவருடைய பெண் சீதை. இராமர் சீதையைக் கல்யாணம் செய்துகொண்டார்.

3. தசரதருக்கு வயது ஆகி தள்ளாமை உண்டாயிற்று. ஆகையால் அவர் இராமருக்கு பட்டாபிஷேகம் செய்ய ஏற்பாடு செய்தார். இராமனின் சிறிய தாயார் இதைத் தடுத்தாள். அவள், தன் மகன் பரதனை இராஜாவாக்க ஆசைப்பட்டாள். இராமனை பதினாலு வருஷம் காட்டிற்குப் போகச் சொன்னாள். இராமரும் அப்படியே காட்டிற்குச் சென்றார். சீதையும் இலக்ஷ்மண



ரும் கூடவே சென்ருர்கள். நடுவில் ஓர் ஆற்றைக் கடந்து சென்ருர்கள். காட்டில் ஓர் குடிசை போட்டுக்கொண்டு வசித்தார்கள்.



II

1. இலங்கை என்பது ஓர் தீவு. நாலு பக்கங்களிலும் ஜலம் சூழ்ந்திருக்கும். அங்கே ஒருவரும் சுலபமாய்ப் போக முடியாது. அதை இராவணன் என்ற ஓர் இராக்ஷஸ அரசன் ஆண்டு வந்தான். அவன் மிக்க துஷ்டன். அவனுக்குப் பத்துத் தலைகள். இருபது கைகள்.

2. இராமர் சீதை இலக்ஷ்மணர் இவர்கள்



காட்டில் ஓர் குடிசையில் வசித்தார்களல்லவா ? ஒரு சமயம் இராமரும் இலக்ஷ்மணரும் வெளியே போயிருந்தார்கள். இராவணன் சமயம்பார்த்து சீதை இருக்கும் இடத்தில் வந்து பிச்சைக்காரன் போல் பிச்சை கேட்டான்.

3. சீதை பிச்சையிட வெளியில் வந்தாள். இராவணன் அவளைத் தூக்கிக் கொண்டுபோய் விட்டான். அவளை இலங்கையில் ஓர் தோட்டத்தில் வைத்திருந்தான். அதற்கு அசோக வனம் என்று பெயர்.

4. பிறகு இராமரும் இலக்ஷ்மணரும் திரும்பி வந்து சீதையைக் காணவில்லை. தவித்தார்கள். சுக்கிரீவன் அனுமான் என்ற இருவர் சிநேகிதர்கள் ஆனார்கள். சீதையைத் தேடினார். காட்டிலிருந்த பல துஷ்டர்களைக் கொன்றார். சீதை இருக்குமிடம் தெரிந்து அங்கு சென்றார். இராவணனோடு சண்டை செய்தார். அவனைக் கொன்று சீதையை மீட்டு

வந்தார். பதினாலு வருஷங்கள் கடந்தன. அயோத்திக்குத் திரும்பி வந்தார்கள். இராமருக்கு பட்டாபிஷேகம் நடந்தது. இராமர் ராஜ்யம் செழிப்பாய் இருந்தது. ஜனங்கள் சந்தோஷமாய் இருந்தார்கள். இன்றைக்கும் ஜனங்கள் "ராம ராம ஜய ராஜாராம், ராம ராம ஜய சீதாராம்" என்று துதி செய்கிறார்கள்.

---



## 20. எங்கள் நாடு

1. உலகிற் சிறந்தது எங்கள் நாடு—பல
   உண்மைகள் தோன்றியது எங்கள் நாடு.

2. தத்துவங்கள் நிறைந்ததுஎங்கள் நாடு—மிக்க
   தபசிகள் வசித்தது எங்கள் நாடு.

3. செந்தமிழ் சிறப்பது எங்கள் நாடு—வெகு
சிவஸ்தலம் ஒங்குவதும் எங்கள் நாடு.

4. வேதங்கள் தோன்றியதும் எங்கள் நாடு—தேவ
கீதங்கள் பாடுவதும் எங்கள் நாடு.

5. நந்தனர் பிறந்ததும் எங்கள் நாடு—அவர்
சந்தமும் புகழ்வது எங்கள் நாடு.

6. பாண்டியர் வாழ்ந்ததும் எங்கள் நாடு—பஞ்ச
பாண்டவர் இருந்ததும் எங்கள் நாடு.

7. ஆங்கிலர் ஆள்வதும் எங்கள் நாடு—அவர்
ஆக்ஷி சிறப்பதும் எங்கள் நாடு.

8. வானவர் போற்றுவதும் எங்கள் நாடு—பாபா
வாசகம் பயில்வதும் எங்கள் நாடு.

---


## 21. உனது நண்பர்

1. நான் உனது நண்பர். உனக்கு உதவி செய்வேன். அதெப்படி?

2. உனக்கு இம்சை செய்கிற பூச்சிகளை நான் சாப்பிடுவேன். அது உனக்கு உபகாரமல்லவா? நான் ஓர் இடத்தில் உட்கார்ந்திருப்பேன். சற்று நேரம் வட்ட மிடுவேன். பிறகு சமயம் பார்த்து, "லபக்" என்று அவைகளைப் பிடித்து சாப்பிடுவேன்.

3. ஜலத்தின் அருகே நீ என்னை விசேஷமாய் பார்ப்பாய். ஏன் தெரியுமா?

4. அதுதான் எனது பழய இடம். நான் தண்ணீரில் கொஞ்ச நாள் வாசஞ் செய்தேன். பிறகு எனக்கு இறக்கைகள் வளர்ந்தன. ஜலத்தைவிட்டு வெளியே வந்தேன். சில காலம் ஜலத்தினருகே இருந்தேன். பிறகு பறக்க ஆரம்பித்தேன். உனக்கு



நண்பனுனேன். நீ எனக்கு இம்சை ஒன்றும் செய்யாதே. என்னைப்பற்றி நீ பிறகு நன்ருய்த் தெரிந்துகொள்ளலாம். எனக்கு வேறு செல்லப் பெயர் உண்டு. "தும்பி" என்பார்கள். உனக்குத் தம்பி இருந்தால் நினைத்துக்கொள். முதலெழுத்தை "து" என்று போட்டுக்கொள். அப்பொழுது நீ என்னை மறக்கமாட்டாய்.

---

## 22. கண்ணன்

1. தங்கப் பூமியில் துவாரகையாம்
   பங்கஜ முகத்தோன் பட்டினமாம்
2. தேவகி வசுதேவர் தறப்பெற்ருர்
   தேவர்களாலே புகழ் பெற்ருர்

3. விஷ்ணுவின் அவதாரம் என்பார்
கிருஷ்ணன் என்னும் பெயருடையார்

4. கோகுலந் தன்னில் வளர்ந்தவராம்
கோக்களைக் கூட்டமாய் மேய்த்தவராம்

5. கண்ணன் ஆடின விளையாட்டு
எண்ண முடியா ஜாலமிட்டு

6. வெண்ணெய் தின்பார் தோழருடன்
கண்காணமல் மறைந்திடுவார்

7. மந்தையில் ஒருதரம் மழை பொழிய
தன் தலை மேல்மலைக் குடை பிடித்தார்

8. பொல்லாதவரை வதைத்திடுவார்
நல்லார் எவரையும் காத்திடுவார்

---

## 23. ஐவர்

1. வட இந்தியாவில் அஸ்தினபுரம் என்பது ஒரு பெரிய நகரம். அதில் பாண்டு, திருதராஷ்டிரன், என்று இரண்டு அரசர்கள் இருந்தார்கள். அவர்கள் இருவரும் சகோதரர்கள். திருதிராஷ்டிராருக்குக் கண் தெரியாது. ஆகையால் பாண்டுவே ராஜ்யத்தை ஆண்டு வந்தார்.

2. திருதிராஷ்டிராருக்கு நூறு பிள்ளைகள். அவர்களுக்கு "கௌரவர்" என்று பெயர். அவர்களில் மூத்தவன் துரியோதனன்.

3. பாண்டுவுக்கு ஐந்து பிள்ளைகள். இவர்களுக்கு "பஞ்ச பாண்டவர்" என்று பெயர். இவர்களில் மூத்தவர் தருமபுத்திரர். மற்றவர்கள் பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன். இவர்கள் மிக்க தர்மிஷ்டர்கள்.

4. எப்பொழுதும் பாண்டவருக்கும் கௌரவருக்கும் விரோதம். இது நாளுக்கு நாள் அதிகரித்தது. கௌரவர்கள், பாதி ராஜ்யத்தைப் பாண்டவர்களுக்கு பங்கிட்டுக் கொடுக்க இஷ்டப்படவில்லை. கௌரவர்கள் பாண்டவர்களைத் தந்திரமாய் காட்டிற்கு அனுப்பிவிட்டார்கள்.

5. பாண்டவர்கள் திரும்பி வந்து ராஜ்யத்தைக் கேட்டபொழுது கொடுக்க மனமில்லை. விரோதம் அதிகரித்து யுத்தம் நடந்தது. சிலபேர் பாண்டவர் கக்ஷியிலும், சிலபேர் கௌரவர் பக்கத்திலும் சேர்ந்தார்கள். கண்ணன் பாண்டவர் பக்கமிருந்து அர்ச்சுனனுக்குத் தேர்ஓட்டினார். யுத்தம்பதினெட்டு நாள் நடந்தது. கடைசியில் பாண்டவர் ஜயம் அடைந்தார்கள்.

தர்மம் தலை காக்கும். பொறுமை நிலை நிறுத்தும்.




## 24. கை வீசு

கைவீசம்மா கைவீசு
கடைக்குப் போகலாம் கைவீசு
மிட்டாய் வாங்கலாம் கைவீசு
மெதுவாய் தின்னலாம் கைவீசு
பழங்கள் வாங்கலாம் கைவீசு
பரிந்து புசிக்கலாம் கைவீசு
சொக்காய் வாங்கலாம் கைவீசு
சொகுசாய் போடலாம் கைவீசு
கோவிலுக்குப் போகலாம் கைவீசு
கும்பிட்டு வரலாம் கைவீசு
குளத்துக்குப் போகலாம் கைவீசு
குளித்து வரலாம் கைவீசு
ஊருக்குப் போகலாம் கைவீசு
உற்றாரைப் பார்க்கலாம் கைவீசு
பள்ளிக்குப் போகலாம் கைவீசு
பாடங்கள் படிக்கலாம் கைவீசு


## 25. கடவுள்.


உன்னையும் என்னையும் உண்டாக்கினவர் கடவுள். அவர் எல்லா ஜீவனையும் உண்டாக்கினூர்.



அவர் எல்லாவிடங்களிலும் இருக்கிறூர். எப்பொழுதும் இருக்கிறூர். அவரே நம்மைக் காப்பாற்றுகிறூர். நமக்கு வேண்டிய காற்று, தண்ணீர், உணவு, வெளிச்சம் முதலியவற்றைக் கொடுக்கிறூர்.

கடவுள் நம்மிடத்தில் வெகு அன்புடையவர். நாம் அவரை வணங்க வேண்டும். நாம் நல்ல காரியங்களைச் செய்தால் அவருக்குப் பிரியம். அவர் நமக்கு உதவி புரிவார். கடவுளை நாம் சுத்தமாய் இருந்து வணங்க வேண்டும்.





இந்துக்கள் கோவில்களில் போய் கடவுளை வணங்குகிறூர்கள். முகம்மதியர் பள்ளிவாசலில் வணங்குகிறூர்கள். கிருஸ்தவர்கள் மாதா கோவிலுக்குப் போகிறூர்கள். இவைகள் எல்லாம் கடவுளை வணங்கும் இடங்கள்.

கடவுளை நம்பினோர் கைவிடப்படார்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று.









## 26. ரூபாய்


நீங்கள் ரூபாய் நாணயத்தைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? படத்தில் அதன் இரண்டு புறங்களையும் பார். ஒரு ரூபாயின் பாதி அரை ரூபாய். அதன் பாதி கால் ரூபாய். இவற்றை எல்லாம் வெள்ளியினால் செய்திருக்கிறார்கள்.




அரை ரூபாய்




நாலணா




கால் ரூபாய்

கால் ரூபாயின் பாதி அரைக்கால் ரூபாய். இவற்றை வெள்ளியினாலும் நிக்கல் என்னும் உலோகத்தினாலும் செய்திருக்கிறார்கள்.








இரண்டணு    அரைக் கால் ரூபாய்    ஒரு அணு

அரைக்கால் ரூபாயின் பாதி வீச ரூபாய். இதற்கு அணு என்று பெயர். ஒரு அணுவிற்கு நாலு காலணு. ஒவ்வொரு காலணுவையும் மூன்று







காலணு    பைசா

பைசாக்களாக மாற்றலாம். பைசாவை தம்படி என்றும் சொல்லுவார்கள். இதுவே சிறிய நாணயம். காலணு அரையணு பைசா இவற்றை செம்பினுல் செய்திருக்கிருர்கள். அணு நாணயம் நிக்கல்.

நாணயங்களின் உதவியால் நாம் சாமான்களை வாங்கலாம். அவற்றை மாற்றிக் கொள்ளலாம். நர்ணயங்கள் வியாபாரத்திற்கு அவசியம். இராஜாங்கத்தார் நாணயங்களை அச்சடித்து வேண்டிய சௌகரியங்களைச் செய்திருக்கிருர்கள்.

திரை கடல் ஓடியும் திரவியம் தேடு



## 27. பழங்கள்

இதோ படத்தில் சில பழங்களைப் பார்! பழங்களுள் மேலானது வாழைப் பழம். வாழை ஆற்றோரங்களிலும் தோட்டங்களிலும் நன்றாய் வளரும். பூவன், பேயன், ரஸ்தாளி, மொந்தன், பச்சை, செவ்வாழை, நேந்திரன், பங்களா மலை வாழை என்று வாழைகளில் பலவகைகள் உண்டு. வாழைப்பழம் பூஜைக்கும், சுப காரியங்களுக்கும் உபயோகமாகும். அது நல்ல உணவு.

மாம்பழமும் சிறந்த பழங்களில் மற்றொன்று இதில்சில புளிப்பாகவும், சில இனிப்பாகவும் இருக்கும். இவைகளில் சில நாட்டுப் பழங்கள். சில ஒட்டுப் பழங்கள். குண்டு, நீலம், பங்களூரா, காதர், பீதர் என்பவை முக்கியமானவை.

பலாப்பழமும் மற்றுமொரு சிறந்த பழம். அதன் மேல் பாகம் முள்ளு முள்ளாய் இருக்கும். அதன் உள்ளே சுளைகள் இருக்கின்றன. அச்சுளைகள் களே இனிப்பானவை.


இம்மூன்று பழங்களையும் முப்பழம் (முக்கனி) என்பார்கள். இவற்றில் வாழைப்பழம் எக்காலங்களிலும், மாம்பழம் பலாப்பழம் வெயிற் காலங்களிலும் கிடைக்கும். பழங்களை மிதமாய்ப் புசித்தால் தேகத்திற்கு சுகம் கொடுக்கும்.

நமது தேசத்தில் அகப்படக்கூடிய பழங்கள் அநேகம் உண்டு. எலுமிச்சை, மாதுளை, கிச்சிலி, திராக்ஷை, முந்திரி, கொய்யா, அனுஸ் முக்கிய மானவை.

1. அம்மான் தோட்டத்தில் மஞ்சள் குருவி ஊஞ்ச லாடுகிறது.

2. அப்பன் சொரியன், ஆயாள் சடைச்சி, நான் சர்க்கரைக் குட்டி.

---




## 28. என் பேயர் என்ன?

| | |
|---|---|
| கை உண்டு | விரல் இல்லை |
| கழுத் துண்டு | தலை இல்லை |
| பை உண்டு | பணம் இல்லை |
| மார்பு உண்டு | மூச்சு இல்லை |
| வயிறு உண்டு | சோறு இல்லை |
| நடை உண்டு | காலுமில்லை |

என் பெயர் என்ன?

சொக்காய்

## 29. காலைப் பாட்டு




காலையில் கண் விழித்ததும்
கடவுளை நாம் வணங்குவோம்.

கண்ணுவாடா பாடசாலை
எண்ணுமெழுத்தும்படிக்கவே
மண்ணில் விளையாட்டை
மறந்து
கண்ணியமாய் படிக்கவே.

பாடம் படிக்கு முன்னே
பரமனை நாம்வணங்கிடுவோம்.

பந்து கிட்டி பலீங்கிச்சு
பாயும் பாண்டிக் கோடுகள்.
தாவிப் பிடிக்கும் உப்புக் கோடு
தாண்டும் பச்சைக் குதிரையும்.
சாயங்காலம் கொஞ்சநேரம்
சகலரும் விளையாடலாம்.
வாசிப்புக் கணக்கெழுத்து
வகையுடன் தெரிந்தபின்.
யார்க்கும் நமக்கும் ஆசைகொ
டுக்கும்
பார்க்கும் சித்திரம் வரையவும்.
கையில்பணமும் காசும்வழங்கும்
கைத்தொழில்களும்செய்யவும்.
இசைந்த முயற்சி உண்டாக்க
இசையுடன் நாம்துதிப்போமே.



## 30. இவர் யார்.

படத்தில் இருப்பவர் யார்? இவர் ஓர் அதிசயமான பிராணி. இவரைப்பற்றி உனக்குத் தெரியுமா?

இவர் தன்னைத் தானே இரக்ஷித்துக்கொள்ள முடியாது. இவருக்கு வேண்டிய ஆகாரம் உடை, இவற்றை இவர் பெற்றோர்களே தேடிக் கொடுக்கிறார்கள். இவருக்கு ஸதா உண்பதும், உறங்குவதும், விளையாடுவதுமே வேலை. இவரைப்போல உங்கள் வீட்டிலும் ஒருவர் இருக்கலாம். இவரிடத்தில் என்ன அதிசயம் காணப்படுகிறது? ஒன்றும் தெரியவில்லையே.

ஆம் இப்பொழுது ஒன்றும் தெரிகிறதில்லை. இவருக்கு வயது ஆனபிறகு இவர் செய்கிற அதிசயங்கள் பல.

இவர் பக்ஷிகளைப்போல் பறக்கமாட்டார். ஆனால் ஆகாயத்தில் வெகுதூரம் போகக்கூடிய ஆகாய விமானங்களைச் செய்து இருக்கிறார். இவர் மானைப்போல் வேகமாய் ஓடமாட்டார். மணிக்கு வெகு தூரம் போகக்கூடிய வண்டிகளைச் செய்திருக்கிறார். மீனைப்போல் இவர் ஜலத்திலேயே மூழ்கமாட்டார். வெகுதூரம் ஜலத்திலே போகக் கூடிய நீர்



முழுகிக் கப்பல்களை செய்திருக்கிறார். இயற்கையில்இவருக்கு வீடுகிடையாது. ஆனால் வெகு விசித்திரமான வீட்டைக் கட்டிக் கொள்ளுகிறார். மின்மினிப்பூச்சிபோல் இவரிடத்தில் விளக்கில்லை. ஆனால் அதிகப் பிரகாசமான விளக்குகளைச் செய்திருக்கிறார். பக்ஷிகளைப் போல் இவருக்கு தூரப் பார்வை இல்லை. தூரதிருஷ்டிக் கண்ணாடிகளைச் செய்திருக்கிறார். உலகத்தில்தினசரி நடக்கிறசமாசாரங்களை அவ்வப்போது தெரிந்து கொள்வார். இன்னும் இவருக்கு விசேஷமான சக்தி உண்டு. அவைகளெல்லாம் இவரிடத்தில் இப்பொழுது மறைந்திருக்கின்றன. இவர் பிறருக்கு உதவி செய்வதிலேயே பிரியப்படுவார்.

ஆஹா! இவைகளெல்லாம் அதிசயங்கள் தான். இவருடைய வேலைகளெல்லாம் கடவுள் சிருஷ்டனை போல் இருக்கிறதே!

ஆம். இவரைப்பற்றி அநேக விஷயங்கள் பிறகு தெரிந்து கொள்ளலாம்.


இவர் யார்? இவரே "பாபா"

---

## 31. எல்லாம் அவன் செயல்

வெகு காலத்திற்கு முன் வட இந்தியாவில் குசேலர் என்ற ஓர் பிராமணர் இருந்தார். அவர் மிக்க ஏழை. அவர் கட்டி யிருந்தது கந்தைத் துணி. வசித்தது ஓர் பழைய குடிசை. அவர் பிக்ஷை எடுத்து ஜீவனம் செய்து வந்தார்.

சுசிலை என்பவள் அவரது மனைவி. அவர்களுக்கு இருபத்தேழு குழந்தைகள். நக்ஷத்திரங்களின் பெயரை அவர்களுக்கு வைத்திருந்தார்கள்.



அக்காலத்தில் கிருஷ்ணன் துவாரகையில் வசித்து வந்தார். கிருஷ்ணனும் குசேலரும் சிநேகிதர்கள். இருவரும் ஒரே பள்ளிக்கூடத்தில் ஒன்றாக வாசித்தவர்கள். இவர்கள் சகபாடிகள்.

ஒருநாள் குசேலர் கிருஷ்ணனைப் பார்க்கப் புறப்பட்டார். கொஞ்சம் அவலை தனது கந்தைத் துணியில் கட்டிக்கொண்டு போனார். கிருஷ்ணனுக்கு அவல் மிகப் பிரியம்.

கிருஷ்ணன் குசேலரை பிரியத்துடன் அழைத்து உபசாரம் செய்தார். நல்ல ஆடைகளைக் கொடுத்தார். குசேலர் கொண்டு வந்த அவலையும் வாங்கி ஒருபிடி சாப்பிட்டார். கிருஷ்ணன் அதிக சந்தோஷப் பட்டார். சிலநாள் குசேலர் கிருஷ்ணனோடு தங்கினார். பிறகு தனது ஊருக்குப் புறப்பட்டு வந்தார். குசேலர் வீடு இருந்த இடத்தில் ஓர் பெரிய மாளிகை இருந்தது. அதில் சுசீலை நல்ல உடைகளையும் நகைகளையும் தரித்துக் கொண்டிருந்தாள். வீட்டில் சகல ஐச்வரியங்களும் நிரம்பி

இருந்தன. குலேசர் "எல்லாம் அவன் செயல்" என்று வியப்படைந்தார்.


## 32. நமது உடை

1. பூமியில் காணும் புல் பூண்டு மரம் செடி இவைகளுக்கு தாவரம் என்று பெயர்.


2. ஆடு, மாடு, கோழி முதலியவற்றிற்கு பிராணிகள் என்று பெயர். உலகத்திலுள்ள எல்லாம் பொருள்களையும் கடவுள் படைத்திருக்கிறார். மனிதனையும் கடவுளே படைத்திருக்கிறார். இவரும் ஒரு பிராணியே. பிராணிகளில் மனிதன் சிறந்தவன். அவன் தனக்கு வேண்டியவற்றை இஷ்டபடி செய்து கொள்ளுகிறான்.

3. அவன் வசிக்க வீடும், உண்ண உணவும், உடுக்க உடையும் செய்து கொள்ளுகிறான். மனிதன் தனது உடையைப் பருத்தி நூலினால் நெய்து கொள்ளுகிறான், பருத்தி உடையே நமது தேசத்திற்கு சிறந்தது.

4. பருத்திச் செடியிலிருந்து பஞ்சை எடுக்கிறான்.



பஞ்சை மணையில் வைத்து கொட்டை வேறு ஆகபிரிக்கிறான். பஞ்சை சுத்தம் செய்து ராட்டையில் நூலாக நூற்கிறான். நூற்ற நூலால் ஆடைகள் நெய்கிறான். இத்தொழில் நம் தேசத்தில் வெகு நாளாய் நடந்து வருகிறது. இப்பொழுது இயந்திரங்களினால் ஆடைகள் நெய்கிறார்கள்.



## 33. மயில்

1. பக்ஷிகளில் மிகவும் அழகானது மயில். அதைக் கோவில்களில் விசேஷமாய்க் காணலாம்.

2. மயிலின் இறகுகளைத் தோகை என்று சொல்லுகிறோம். அது பல நிறங்களுடையது. முக்கியமாய் அதில் மஞ்சள், பச்சை, நீலம் காணப்படும். ஆண் மயிலுக்குத் தோகை உண்டு. பெண்மயிலுக்குத் தோகை இல்லை. மயிலின் இறகினால் விசிறிகள் கட்டுகிறார்கள்.

3. மயில் சந்தோஷம் வந்தால்தன் தோகையை விரித்து ஆடும். அப்பொழுது பார்ப்பதற்கு அழகாய் இருக்கும். மயில் சுப்பிரமணியருக்கு ஏற்பட்ட வாகனங்களில் ஒன்றாகும்.

ஆறு முகம் வாழி
ஆறிரண்டு தோள்வாழி
தேறு பதம் வாழி
இரு தேவிமார்—வீறுபடை வாழி
வேல் வாழி மயில்வாழி
போரூரர் வாழி சகம் வாழி மகிழ்ந்து.





## 34. இராஜ வாழ்த்து

இந்திய சக்கிரவர்த்தி என்றுமே
ஓங்கிப் புகழ் பெற வாழ்கவே.
பாலர் படிப்பதில் பரிவுடன்
சாலக் கொடை கோமான் வாழ்கவே.
வாதுகள் நேரிடும் ஏதறவே
பாதுகாக்கு மன்னன் வாழ்கவே.
தார் வேந்தர் இந்தியர் தழைத்தோங்க
ஆர்வமுடன் பதிபணிவோமே.

---

## 35. வாழ்த்து பாட்டு

1. வாழ்க நிரந்தம் வாழ்க தமிழ்மொழி
   வாழிய வாழியவே
2. எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
   என்றென்றும் வாழியவே
3. தொல்லை வினைதரு தொல்லை யகன்று
   சுடர்க தமிழ்நாடே
4. வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
   வாழ்க தமிழ் மொழியே

சு. பா.

# 36. ஆத்திசூடி

ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே

1. அறஞ்செய விரும்பு
2. ஆறுவது சினம்
3. இளமையிற் கல்
4. ஈவது விலக்கேல்
5. உடையது விளம்பேல்
6. உத்தமன் ஆயிரு
7. ஊக்கமது கைவிடேல்
8. ஊருடன் கூடிவாழ்
9. எண் எழுத்திகழேல்
10. ஏற்பது இகழ்ச்சி
11. ஐயம் இட்டுண்
12. ஓதுவது ஒழியேல்
13. ஔவியம் பேசேல்
14. கண்டொன்று சொல்லேல்
15. கீழ்மை அகற்று
16. குணமது கைவிடேல்
17. கூடிப் பிரியேல்
18. கெடுப்ப தொழி
19. கேள்வி முயல்
21. கொள்ளை விரும்பேல்
22. சான்றோ ரினத்திரு
23. சுளிக்கச் சொல்லேல்
24. சூது விரும்பேல்

25. செய்வன திருந்தச்செய்
26. சேரிடம் அறிந்துசேர்
27. சோம்பித் திரியேல்
28. தந்தைதாய்ப் பேண்
29. தீவினை அகற்று
30. துன்பத்திற்கு இடம் கொடேல்
31. தூக்கி வினைசெய்
32. தெய்வம் இகழேல்
33. தேசத்தோடு ஒத்துவாழ்
34. நன்றி மறவேல்
35. நன்மை கடைப்பிடி
56. நாடு ஒப்பன செய்
37. நூல் பல கல்
38. நெற் பயிர் விளை
39. நோய்க்கு இடம் கொடேல்
40. பருவத்தே பயிர் செய்
41. பிழைபடச் சொல்லேல்
42. பூமி திருத்தி உண்
43. பெரியாரைத் துணைக்கொள்
44. பொருள் தனைப் போற்றிவாழ்
45. மீதூண் விரும்பேல்
46. மூர்க்கரோடு இணங்கேல்
47. மேன்மக்கள் சொல்கேள்
48. மொழிவது அறமொழி
49. வல்லமை பேசேல்
50. வித்தை விரும்பு
51. வைகறைத் துயில் எழு.

ஔவையார் அருளிச்செய்த

# 37. உலக நீதி

## காப்பு

உலகநீதி புராணத்தை யுரைக்கவே
கலைகளாய்வருங் கரிமுகன் காப்பு.

ஓதாம லொருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை யொருநாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோ டிணங்க வேண்டாம்
போகாத விடந்தனிலே போக வேண்டாம்
போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்
வாகாருங் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே! 1.

நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்
நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்
நஞ்சுடனே ஒருநாளும் பழக வேண்டாம்
நல்லிணக்க மில்லாரோ டிணங்க வேண்டாம்
அஞ்சாமற் றனிவழியே போக வேண்டாம்
அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்
மஞ்சாரும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே! 2.

மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்
மாற்றானை யுறவென்று நம்ப வேண்டாம்
தனந்தேடி யுண்ணாமற் புதைக்க வேண்டாம்
தருமத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்

சினந்தேடி அல்லலையுந் தேட வேண்டாம்
சினத்திருந்தார் வாசல்வழி சேர வேண்டாம்
வனந்தேடுங் குறவரிட வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே! — 3.

குற்றமொன்றும் பாராட்டித் திரிய வேண்டாம்
கொலைகளவு செய்வாரோ டிணங்க வேண்டாம்
கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டாம்
கற்புடைய மங்கையரைக் கருதவேண்டாம்
கொற்றவனோ டெதிர்மாறு பேச வேண்டாம்
கோயிலில்லா வூரிற்குடி யிருக்க வேண்டாம்
மற்றுநிக ரில்லாத வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே! 4.

வாழாமற் பெண்ணைவைத்துத் திரிய வேண்டாம்
மனையாளைக் குற்றமொன்றுஞ் சொல்ல வேண்டாம்
வீழாத படுகுழியில் வீழ வேண்டாம்
வெஞ்சமரிற் புறங்கொடுத்து மீள வேண்டாம்
தாழ்வான குலத்துடனே சேர வேண்டாம்
தாழ்ந்தவரைப் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
வாழ்வாருங் குறவரிட வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே! 5.

வார்த்தை சொல்வார் வாய்பார்த்துத் திரியவேண்
மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம் [டாம்
மூத்தோர்சொல் வார்த்தைதன்னை மறக்க வேண்டா
முன்கோபக் காரரோ டிணங்க வேண்டாம் [ம்
வாத்தியார் கூலியைவைத் திருக்க வேண்டாம்
வழிபறித்துத் திரிவாரோ டிணங்க வேண்டாம்
சேர்ந்தபுக ழானதொரு வள்ளி பங்கன்
திருக்கைவே லாயுதனைச் செப்பாய் நெஞ்சே! 6.

கருதாமற் கருமங்கள் முடிக்க வேண்டாம்
கணக்கழிவை ஒருநாளும் பேச வேண்டாம்
பொருவார்தம் போர்க்களத்தில் போக வேண்டாம்
பொதுநிலத்தில் ஒருநாளும் இருக்க வேண்டாம்
இருதார மொருநாளும் தேட வேண்டாம்
எளியாரை எதிரிட்டுக் கொள்ள வேண்டாம்
குருகாரும் புனங்காக்கும் ஏழை பங்கன்
குமரவேள் பாதத்தைக் கூறாய் நெஞ்சே! 7.

சேராத விடந்தனிலே சேர வேண்டாம்
செய்தநன்றி ஒருநாளும் மறக்க வேண்டாம்
ஊரோடுங் குண்டுணியாய்த் திரிய வேண்டாம்
உற்றாரை உதாசினங்கள் சொல்ல வேண்டாம்
பேரான காரியத்தைத் தவிர்க்க வேண்டாம்
பிணைபட்டுத் துணைபோய் நீ திரிய வேண்டாம்
வாராருங் குறவரிட்ட வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே! 8.

மண்ணினின்று மண்ணோரஞ் சொல்ல வேண்டாம்
மனஞ்சலித்து திடுகிட்டுத் திரிய வேண்டாம்
கண்ணழிவு செய்து துயர் காட்ட வேண்டாம்
காணாத வார்த்தையைக்கட் டுரைக்க வேண்டாம்
புண்படவே வார்த்தைகளைச் சொல்ல வேண்டாம்
புறஞ்சொல்லித் திரிவாரோ டிணங்க வேண்டாம்
மண்ணளந்தான் தங்கையுமை மைந்தனென்கோன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே! 9.

மறம்பேசித் திரிவாரோ டிணங்க வேண்டாம்
வாதாடி வழக்கழிவு சொல்ல வேண்டாம்
திறம்பேசிக் கலகமிட்டுத் திரிய வேண்டாம்
தெய்வத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்

இறந்தாலும் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்
ஏசலிட்ட உற்றாரை நத்த வேணடாம்
குறந்தனிலே வாழ்கின்ற வள்ளி பங்கன்
குமரவேள் நாமத்தைக் கூறாய் நெஞ்சே! 10.

அஞ்சுபேர் கூலியைக் கைக்கொள்ள வேண்டாம்
கூறாக்கி ஒரு குடியைக் கெடுக்க வேண்டாம்
கொண்டைமேல் பூத்தேடி முடிக்க வேண்டாம்
தூறாக்கித் தலையிட்டுத் திரியவேண்டாம்
துர்ச்சனராய்த் திரியவேண்டாம்
வீறான தெய்வத்தை இகழவேண்டாம்
வெற்றியுள்ள பெரியாரை வெறுக்கவேண்டாம்
மாறான குறவருடை வள்ளிபங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே! 11.

ஆதரித்துப் பலகையாற் பொருளுந் தேடி
அருந்தமிழா லறுமுகனைப் பாடவேண்டி
ஓதுவித்த வாசகத்தா லுலக நாதன்
உண்மையாய்ப் பாடிவைத்த உலகநீதி
காதலித்துக் கற்றோரும் கேட்ட பேரும்
கருத்துடனே நாடோறுங் களிப்பி னோடு
போதமுற்று மிகவாழ்ந்து புகழுந் தேடிப்
பூலோக முள்ளளவும் வாழ்வார் தாமே. 12.

THE B. N. PRESS, EDUCATIONAL PRINTERS, MADRAS.—1934

